இல்லாமல் எடுக்கப்படுகிறது என்பதை அவை ஏற்று, இதுகுறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது. '

[முற்பகல் 12.40]

4. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி)

(ஆ) விதி 54(6)–ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''ஒரு கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்கு கொண்டு வரக்கூடாது என்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 54(6)ஐ இன்று தளர்த்தவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

6. கவன ஈர்ப்புகள்.

அ. குளித்தலையில் சூறாவளிக் காற்றால் பயிர்கள் பாதிப்பு.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, ''21–4–1981 அன்று திருச்சி மாவட்டம் குளித்தலையில் வீசிய சூறாவளிக் காற்றால் பயிர்கள் பாதிக்கப்பட்டது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 21.4.1981-அன்று வீசிய சூறாவளிக் காற்றால் 10% வாழைப்பயிர்கள் சேதம் அடைந்துஇருக்கின்றன. குளித்தலை பிர்க்காவில் 2345 ஏக்கரும், நங்கவரம் பிர்க்காவில் 1825 ஏக்கரும் சேதம் அடைந்துள்ளது. சேதத்தின் மதிப்பு ரூ 40,000. அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக விவர அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அதற்கு நஷ்டஈடு கொடுப்பதைப் பற்றி அரசு ஆவன செய்யும்.

திரு. இரா. கருப்பையா: துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சூறாவளிக் காற்றின் காரணமாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட தகவலின்படியே சுமார் 4200 ஏக்கர் வாழைப் பயிர் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே வாழை மட்டுமல்ல, கரும்பு போன்ற பயிர்களும், தென்னை போன்ற பயிர்களும் பாதிக்கப்

பட்டிருக்கின்றன. வாழை ஒடிந்ததால் வாழ்வே உடைந்து போன விவசாயிகளை நாம் பார்த்து இருக்கிறோம். அந்த மாதிரியான வகையில் விவசாயிகள் இப்போது பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். அம்மாதிரி நஷ்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கை களில் இறங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தால் விவசாயிகள் அல்லலுறுகிறபோது சட்டவிதிகளின்படி அவர்களுக்கு உதவிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இப்போது அந்தச் சட்டவிதிகளின்படி உதவிகள் அவர்களுக்கு அளிக்க அரசு தயாராக இருக்கிறது. மாவட்டஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து குறிப்பு வந்தபிறகு அரசு ஆவன செய்யும்.

திரு. இரா. கருப்பையா: துணைத் தலைவர் அவர்களே, இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அவர்கள் அரசுக்கும், மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கும் செலுத்தவேண்டிய கடன்கள் இருக்கின்றன. இந்த விவசாயிகள் ஏற்கனவே கடன் வாங்கி இந்த விவசாயத்திலே முதலீடு செய்து இழந்து இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய விஷயத்தில் இந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இருந்தாலும், இந்தக் கடன் வசூலை ஒத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அரசு கவனம் செலுத்தும்.

(ஆ) தஞ்சை மாவட்டம் மாத்தூர் கிராமக் கூட்டுறவுசேவாசங்கம்

திரு. எஸ். இராசாராமன்: துணைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம் மாத்தூர் கிராமக் கூட்டுறவு சேவா சங்கத்தில் டை-அமோனியம் பாஸ்பேட் உரக் கலப்பட வழக்கில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பின் மீது நடவடிக்கை எடுக்காதது குறித்த'' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, நான் பேரவையின் முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மாத்தூர் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள உரத்தில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதாக மாத்தூர் திரு. ஜி. சக்திவேலு என்பவரின் புகாரின் பேரில் மாத்தூர் துணை விவசாய அலுவலர் (உரக் கட்டுப்பாடு) 28-9-77 அன்று மாத்தூர் விவசாய சேவைக் கூட்டுறவு சங்கத்திற்குச் சென்று 5,650 மெட்ரிக் டன் (133 மூட்டை) டை-அமோனியம் பாஸ்பேட் (Di-ammonlum Phosphate) உரத்தைக் கைப்பற்றி மாத்தூர் கிராம அதிகாரியிடம்